## கம்பம் நகராட்சி

## (தேனி மாவட்டம்)

## நிர்வாக அறிக்கை 2021 -2022

1. அமைப்பும், மேலாட்சியும்:

ஆட்சி எல்கை:

கம்பம் நகராட்சி 29.09.1958-ஆம் தேதிய உள்ளாட்சித்துறை அரசாணை எண்.1441-இன்படி பேரூராட்சியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சி அந்தஸ்த்திற்கு உயர்த்தப்பட்டது. தற்சமயம் இந்நகராட்சி எல்லைக்குள் உத்தமபுரம், வருவாய் கிராமத்தின் ஒரு பகுதியும் மற்றும் கம்பம் வருவாய் கிராமத்தின் ஒரு பகுதியும் சேர்ந்ததாகும்.

பின்னர், ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை எண்.143, நாள்.25.01.1975-இன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வந்தது. 22.05.1998-ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (ந.நி.5) துறை அரசாணை (நிலை) எண்.85-இன்படி முதல்நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இந்நகராட்சியின் பரப்பு 6.58 ச.கி மீட்டராகும். அறிக்கை ஆண்டில் நகராட்சியின் எல்கைகளிலும், வார்டுகளிலும் மாற்றம் ஏதுவும் இல்லை. நகரம் 33 தொகுதிகளாக (வார்டுகள்) பிரிக்கப்பட்டுள்ளது.

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சி 28 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, அவ்வார்டு பிரிவினை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண்.968, நாள்.29.11.1990-இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

1992-ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பின் பிரகாரம் ஆண்கள் 26507, பெண்கள் 25928 மொத்தம் 52,435. இதில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 3580 ஆகும். 2001-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 58891 இதில் ஆண்கள் 29515, பெண்கள் 29376 ஆகும். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஆண்கள் 33848, பெண்கள் 34242 மொத்தம் 68090 ஆகும்.

**<u>இயங்கும் அலுவலர்கள்:</u>**

| | |
|---|---|
| 1) | திரு.மெ. சரவணகுமார், ஆணையாளர் 13.10.2020 முதல் 22.12.2021 வரை பணிபுரிந்து வந்தார். |
| 2) | திரு.ப.பாலமுருகன், ஆணையாளர் 24.12.2021 முதல் பணிபுரிந்து வருகிறார். |
| 3) | திருமதி. இ. செல்வராணி நகராட்சி பொறியாளராக 13.03.2019 முதல் 03.08.2021 முடிய பணிபுரிந்து வந்தார். |
| 4) | திரு. பி. பன்னீர் நகராட்சி பொறியாளராக 04.08.2021 முதல் பணிபுரிந்து வருகிறார். |
| 5) | திரு.சு. முனிராஜ் 10.04.2020 முதல் 30.09.2021 முடிய மேலாளராக பணிபுரிந்து வந்தார். |
| 6) | திரு.ப.புஷ்பலதா மேலாளர் 01.10.2021 முதல் பணிபுரிந்து வருகிறார். |

**<u>தேர்தல்கள்</u>**

**இந்நகர் மன்றத்திற்கு 19.02.2022-ஆம் தேதி உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 02.03.2022-ஆம் தேதி முதல் பொறுப்பேற்று உள்ளார்கள்.**

**<u>பகுதிகள்</u>**

11.06.1996-ஆம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (நகராட்சி தேர்தல்) துறையின் 135-ஆம் எண் அரசாணையில் 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கேற்ப 33 வார்டுகளாக பிரித்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு 8, 12, 14, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 28, 29 மற்றும் 30 ஆகிய 15 வார்டுகளும் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர் வகுப்பினருக்கு வார்டு எண். 9, 13 மற்றும் 33 ஆகிய வார்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

**<u>அ. மன்றம்</u>**

அறிக்கையாண்டில் திருமதி.நெ.வனிதாநெப்போலியன் நகர்மன்றத் தலைவராகவும், திருமதி.செ.சுனோதாசெல்வக்குமார் நகர்மன்ற

துணைத்தலைவராகவும் கீழ்கண்டவர்கள் நகர்மன்ற உறுப்பினர்களாகவும் செயல்பட்டு வருகிறார்கள்.

| வ. எண். | பெயர் (தமிழ்) | பெயர் (ஆங்கிலம்) | பதவி |
|---|---|---|---|
| 1 | வனிதா நெப்போலியன் நெ | Vanitha Neppoliyan .N | ChairPerson -W -3 |
| 2 | சுனோதா செல்வக்குமார் செ | Sunotha Selvakumar .S | Vice ChairPerson - W-18 |
| 3 | பார்த்திபன் ம | Parthiban .M | Councillor - W 1 |
| 4 | இளம்பரிதி சி | Elamparithi .C | Councillor - W 2 |
| 5 | மாதவன் ரா | Mathavan .R | Councillor - W 4 |
| 6 | குமரன் கு | Kumaran .K | Councillor - W 5 |
| 7 | முருகன் எம்.பி | Murugan M.P | Councillor - W 6 |
| 8 | சுந்தரி வீ | Sundari .V | Councillor - W 7 |
| 9 | சாபிரா பேகம் சு | SabiraBegam .S | Councillor - W 8 |
| 10 | அமுதா எ | Amutha .A | Councillor - W 9 |
| 11 | சர்புதீன் இ | Sarbudeen .E | Councillor - W 10 |
| 12 | சாதிக் அலி அ | SathikAli .A | Councillor - W 11 |
| 13 | சகிதா பானு சை | Sakitha Banu .S | Councillor - W 12 |
| 14 | வசந்தி ஜெ | Vasanthi .J | Councillor - W 13 |
| 15 | அன்புகுமாரி ஜெ | Anbukumari .J | Councillor - W 14 |
| 16 | சுல்தான் சல்மான் பார்ஸி பீ நூ | Sulthan Salmon Parcy .B.N | Councillor - W 15 |
| 17 | சம்பத்குமார் கோ | Sambath Kumar .G | Councillor - W 16 |
| 18 | வீரசிக்கம்மாள் சி | Veeruchikkammal .C | Councillor - W 17 |
| 19 | மணிமேகலா க | Manimegala .K | Councillor - W 19 |
| 20 | சபியா பானு அ | Sabiya Banu A | Councillor - W 20 |
| 21 | விஜயலட்சுமி ம | Vijayalakshmi .M | Councillor - W 21 |
| 22 | வளர்மதி ச | Valarmathi .S | Councillor - W 22 |
| 23 | சுபத்ரா சொ | Subathra .C | Councillor - W 23 |
| 24 | தீபா மா | Deepa .M | Councillor - W 24 |
| 25 | .ரோஜா ரமணி எம் | Roja ramani .M | Councillor - W 25 |
| 26 | செந்தில்குமார் க வா | Senthil Kumar | Councillor - W 26 |
| 27 | விருமாண்டி அ | Virumandi .A | Councillor - W 27 |
| 28 | அபிராமி ஜி | Abirami .J | Councillor - W 28 |
| 29 | லதா ரா | Latha .R | Councillor - W 29 |
| 30 | சுமதி க | Sumathi .K | Councillor - W 30 |
| 31 | ராஜா மா | Raja M | Councillor - W 31 |
| 32 | மணிகண்டன் சி.த | Manikandan | Councillor - W 32 |
| 33 | முருகன் சு | Murugan .S | Councillor - W 33 |

| குழு உறுப்பினர்கள்: | |
|---|---|
| 1) | **<u>நியமனக்குழு உறுப்பினர்</u>**<br>திருமதி. சொ. சுபத்ரா, (வார்டு -23) |
| 2) | **<u>ஒப்பந்தக்குழு உறுப்பினர்</u>**<br>திரு.இ. சர்புதீன் (வார்டு -10) |
| | **<u>வரிமேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்கள்</u>** |
| 3) | **1) ஜெ. அன்புகுமாரி (வார்டு -14)**<br>**2) ஜெ. வசந்தி (வார்டு -13)**<br>**3) எம். ராஜா (வார்டு -31)**<br>**4) ஆர். லதா (வார்டு -29)** |

<u>நகர்மன்றக் கூட்டங்கள்:</u>

அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட விவரப்படி நகர்மன்ற கூட்டங்கள் நடைபெற்று பொருட்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

<u>நகர்மன்றக்கூட்ட நடவடிக்கைகள் எண்ணிக்கை:</u>

| கூட்டத்தின் தன்மை | மொத்தம் | பொருட்கள் |
|---|---|---|
| சாதாரணம் | 2 | 30 |
| சிறப்பு | - | - |
| அவசரம் | 1 | 32 |
| மொத்தம் | 3 | 62 |
| குழுக்கள் | நடந்த கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
| 1) நியமனக்குழு | - | - |
| 2) ஒப்பந்தக்குழு | - | - |
| 3)வரிமேல்முறையீட்டுக் குழு | - | - |
| 4) உள்ளூர் திட்டக்குழு | - | - |

**<u>மேலாளுகை:</u>**

பொதுநிதிக் கணக்கின் கீழ் நகராட்சி பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் இதர செலவினங்கள் பொதுப்பிரிவு பணியாளர்களுக்கு ரூ.76881431/- குடிநீர்

**பணியாளர்களுக்கு ரூ.9031524/- ஆகும். சென்ற ஆண்டு செலவு முறையே ரூ. 38130770/- ஆகும்.**

4) **வழக்குகளும் சட்டச் செலவுகளும்:**

அ) நகர்மன்றத்திற்கு என பிரத்தியோகமாக நிலையான சட்ட வழக்கறிஞராக (Standing Council) திரு. இரா. காந்தன் இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1244 நாள்.31.08.2000-இன்படி 13.09.2000 முதல் இருந்து வருகிறார்.

ஆ) அறிக்கையாண்டில் நிலுவையாக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை - 8

இ) அறிக்கையாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை - 0

வழக்கு கட்டணமாக ரூ.59,000/-நடப்பாண்டில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள் :**

அ) பெரியகுளம் - கம்பம் - குமுளி ரோடு, கம்பம் மெட்டு ரோடு, கே.கே.பட்டி ரோடு ஆகிய மூன்று நெடுஞ்சாலைகள் இந்நகரின் பகுதியில் அமைந்துள்ளன. இவை மூன்றும் மாநில நெடுஞ்சாலை துறைக்குச் சொந்தமானவை. எனவே இவைகள் மாநில நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஆ) இந்நகராட்சியின் சாலை வேலைகளுக்கு சல்லியும், சரளையும், ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெறப்பட்டு உபயோகப்படுத்தப்படுகிறது. நகராட்சிக்குச் சொந்தமான கற்பாறைகள் கிடையாது. கற்பாறைகள், இந்நகராட்சியின் பகுதியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தேவையான கருங்கற்கள் லாரி அல்லது வண்டி மூலம் வரக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

அறிக்கையாண்டில் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த மொத்த சாலைகளின் விவரம் பின்வருமாறு உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | தார்தளம் போட்ட சாலைகள் | 62.222 கி.மீ | |
| 2) | சிமெண்ட் சாலை | 34.580 கி.மீ | |
| 3) | மண்சாலை | 11.898 கி.மீ | |

| | மொத்தம் | 108.70 கி.மீ | |
|---|---|---|---|

நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகள் அனைத்தும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

**<u>1) கல்விநிதி</u>**

ஆண்டில் கல்வி நிதியின் கீழ் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

2021-2022- ஆம் ஆண்டு சொத்துவரியிலிருந்து கிடைக்கப்பெற்ற கல்வி வரி ரூ.3667980/- ஆகும். இந்நிதியிலிருந்து வாடகையில் இயங்கி வரும் இந்நகராட்சி பள்ளிக்கட்டிடங்களுக்கு மராமத்து பணிகள் மற்றும் மின்சாரக் கட்டணம் ரூ.2503592/- செலுத்தப்பட்டுள்ளது. கல்விநிதி திட்டத்தின்கீழ் நகராட்சி பள்ளிகளை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தி, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.65624/2005/இ3, நாள்.14.11.2005-இன்படி பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆணையாளர், பொறியாளர் குடியிருப்பு இல்லங்கள் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு மையங்கள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் வருமானம் ரூ.612000/- ஆகும்.

இந்நகராட்சியில் பயணியர் விடுதி ஏதும் இல்லை. பயணியர் விடுதி கட்டும் திட்டம் தற்போது ஏதும் இல்லை. தாத்தப்பன் குளத்தில் ஒரு சமுதாய கூடம் கட்டப்பட்டு மாத வாடகை ரூ.4500/- வீதமும், ஆங்கூர்பாளையம் ரோட்டில் ஒரு சமுதாய கூடம் கட்டப்பட்டு மாத வாடகை ரூ.8000/- வீதமும் விடப்பட்டு தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

கம்பம் நகரில் புதிய பேருந்து நிலையம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலம் 1.70 கோடி மதிப்பீட்டில் ரூ.89/- இலட்சம் கடனாகவும், ரூ.51/- இலட்சம் மானியமாகவும், ரூ.28/- இலட்சம் பொதுமக்கள் பங்களிப்புடனும் கட்டப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையம் 01.04.2004 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி புதிய பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் பொருட்கள் பாதுகாப்பு அறை, உணவகம் மற்றும் கடைகள் அமைக்கப்பட்டு மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இதன் மூலம் அறிக்கையாண்டில் வருமானம் ரூ. 27,00,000/- ஆகும்.

இந்நகர் வழியாகச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் நகராட்சி பேருந்து நிலையத்திற்குள் வந்து போகின்றன. கம்பம் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களை இணைக்கும் வகையில் நகரப்பேருந்துகள் விடப்பட்டுள்ளன. இந்நகரிலிருந்து சென்னை, பெங்களூர், பாண்டிச்சேரி, எர்ணாகுளம், திருச்சி, ஈரோடு, பழனி, கோயம்புத்தூர், நாகர்கோவில் போன்ற தொலை தூரங்களும், தேக்கடி, ஏலப்பாறை, கம்பம்மெட்டு, நெடுங்கண்டம் போன்ற கேரள மாநில மலைவாசல் ஸ்தலங்களுக்கும் தினமும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இந்நகராட்சியால் தினசரி சந்தை ஒன்றும், வாரச்சந்தை ஒன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. வாரச்சந்தைக்கு மட்டும் தனியாக ஒரு காவலர் பணிபுரிந்து வருகின்றனர். தனியாருக்குச் சொந்தமான மார்க்கெட்டோ, வண்டிப்பேட்டையோ இல்லை. இதன் மூலம் அறிக்கையாண்டில் வருமானம் ரூ.2478985/-

இந்நகராட்சி பூங்கா அருகில் அரசால் உழவர் சந்தை விவசாயிகள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகின்றது.

இந்நகரில் பெரிய தொழிற்சாலைகள் ஒன்றும் இல்லை. நகராட்சியால் ஆடு அடிக்கும் தொட்டி ஒன்று பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் அறிக்கையாண்டில் வருமானம் ரூ. 460000/- ஆகும்.

**குத்தகை இனம்:**

2021-2022-ஆம் ஆண்டில் நகராட்சிக் சொந்தமான இடங்கள் மற்றும் கட்டிடங்கள் குத்தகைக்கு விடப்பட்டதால் கிடைத்த வருமானம் கீழ்வருமாறு உள்ளது.

| வ.எண். | இனம் | 2021-2022 |
|---|---|---|
| 1 | வாரச்சந்தை | 393985 |
| 2 | தினசரிசந்தை | 2085000 |
| 3 | ஆடு அடிக்கும் தொட்டி | 460000 |
| 4 | பேருந்து நிலைய வளாக கடைகள் | 2706081 |
| 5 | பெட்டிக்கடைகள் | 29376 |
| 6 | அரசுக் கட்டிடங்கள் | - |

**<u>பொறியியல் பிரிவு:</u>**

**<u>விளக்கு வசதிகள்:</u>**

நகராட்சிப்பகுதியில் உள்ள தெரு விளக்குகள் அனைத்தும் தமிழ்நாடு மின்சார வாரியத்தினரால் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்சமயம் அரசாணை எண்.344, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும்துறை, நாள்.09.06.1989-இன்படி 15.09.1989 முதல் நகராட்சியே மேற்கொண்டுள்ளது. தெருவிளக்கு பணியை மேற்கொள்ள 2 வயர்மேன் மற்றும் 1 ஹெல்பர்களை கொண்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

2021-2022-ஆம் நிதியாண்டில் நகரில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி திட்டத்தில் ரூ. 33.00 லட்சம் மதிப்பீட்டில் 250 புதிய தெருவிளக்குகள் அமைக்கப்பட்டது. மொத்தம் தெருவிளக்கு எண்ணிக்கை - 2660 பராமரிக்கப்பட்டு வருகிறது.

Tube Light - 1817

LED Light - 843

---------------------

**Total 2660**

----------------------

| **வ.எண்.** | **விளக்குகள் விவரம்** | |
|---|---|---|
| 1 | **உயர்மின் கோபுர விளக்குகள்** | **6 No (41 பிட்டிஸ்) 150W LED** |

## பொது நிதி - திட்டச்செயலாக்கம்

## 2020-2021-ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகள் முடிவு செய்யப்பட்டவை மற்றும் நிலுவையில் உள்ளவை ஆகியன குறித்த விவரங்கள் பின்வருமாறு

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு இலட்சத்தில் | செலவு இலட்சத்தில் | வேலை எண்ணிக்கை | வேலை முடிவு | நிலுவை | தொகை ரு.இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2020-2021-இல் தொடங்கி முடிக்கப்பட்ட பணிகள் | | | | | | |
| | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் | ரூ.965.39 | ரூ.246.62 | 3 | 1 | 2 | ரூ.718.77 |
| 2 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | | | | | | |
| | அங்கன்வாடி மையம் கட்டுதல் | ரூ.10.00 | ரூ.10.00 | 1 | 1 | 0 | |
| 3 | 2020-2021-இல் தொடங்கி நிலுவையில் உள்ள பணிகள் | | | | | | |
| | உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2020-2021 I | ரூ.230.00 | ரூ.95.00 | 9 | 8 | 1 | ரூ.135.00 |
| | உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் 2020-2021 II | ரூ.243.00 | ரூ.57.93 | 9 | 8 | 1 | ரூ.185.07 |
| | 15வது நிதி குழு திட்டம் 2020-2021 | ரூ.182.00 | ரூ.57.97 | 6 | 3 | 3 | ரூ.124.03 |
| | | | | | | **மொத்தம்** | **ரூ.1482.50** |

## குடிநீர்நிதி - திட்டச்செயலாக்கம்

## 2020-2021-ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகள் முடிவு செய்யப்பட்டவை மற்றும் நிலுவையில் உள்ளவை ஆகியன குறித்த விவரங்கள் பின்வருமாறு

| வ. எ ண். | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு இலட்சத்தில் | செலவு இலட்சத்தில் | வேலை எண்ணிக்கை | வேலை முடிவு | நிலுவை | தொகை ரு.இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| I | 2020-2021- தொடங்கி செய்து முடிக்கப்பட்ட பணிகள் | | | | | | |
| | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகள், குடிநீர் விநியோக வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் அகியவற்றை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்தல். | ரூ.9.80 | ரூ.9.80 | 1 | 1 | 0 | |
| | நகரில் 18 முதல் 33 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகள், குடிநீர் விநியோக வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் அகியவற்றை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்தல் | ரூ.9.80 | ரூ.9.80 | 1 | 1 | 0 | |
| | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசைமோட்டார்கள் மற்றும் பொதுகழிப்பறைகள் இதர பயன்பாடுகளுக்குரிய மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்க்கொள்தல். | ரூ.9.60 | ரூ.9.60 | 1 | 1 | 0 | |
| | நகரில் 18 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசைமோட்டார்கள் | ரூ.9.60 | ரூ.9.60 | 1 | 1 | 0 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மற்றும் பொதுகழிப்பறைகள் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுன் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்க்கொள்தல். | | | | | | |
| | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு தேவையான கேஸ் ளோரினேசன்சிலிண்டர் வாஙகுதல். | ரூ.6.70 | ரூ.6.27 | 1 | 1 | 0 | ரூ.0.43 |
| | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு பொருத்தப்பட்ட கேஸ் குளோரினேசன் பிளான்ட்டில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | ரூ.5.70 | ரூ.5.70 | 1 | 1 | 0 | ரூ.5.70 |
| | லோயர்கேம்ப் நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு 75 குதிரை திறன்மின் மோட்டார்கள், மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் 10எச்.பி., 30 எச்.பி., 60 எச்.பி., என 8 மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | ரூ.6.50 | ரூ.6.50 | 1 | 1 | 0 | ரூ.6.50 |
| | நகரில் 33 வார்டுகளிலும் உள்ள அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளதல் | ரூ.1.00 | ரூ.1.00 | 1 | 1 | 0 | |
| | மொத்தம் | | | | | | ரூ.12.63 |

## கல்விநிதி - திட்டச்செயலாக்கம்

## 2020-21-ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகள் முடிவு செய்யப்பட்டவை மற்றும் நிலுவையில் உள்ளவை ஆகியன குறித்த விவரங்கள் பின்வருமாறு

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு இலட்சத்தில் | செலவு இலட்சத்தில் | வேலை எண்ணிக்கை | வேலை முடிவு | நிலுவை | தொகை ரு.இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| I | 2020-2021- தொடங்கி செய்து முடிக்கப்பட்ட பணிகள் | | | | | | |
| | கம்பம் நகராட்சி நடுநிலைப் பள்ளி (சு§f«)¡F KifÔ‹M©lt®òu«, o.v°.v©.2177/2Ã1, IÎ‹ r®nt th®L –V efuh£Á th®L v©.12 gFÂæš òÂa gŸë (RCC) f£ol« f£L« gâ | ரூ.9.50 | ரூ.9.50 | 1 | 1 | 0 | ரூ.9.50 |
| | மொத்தம் | | | | | | ரூ.9.50 |

### குடிநீர் விநியோகம்:

நகரின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களின் நன்மையை முன்னிட்டு 170 பொது குழாய்கள் அமைக்கப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

மேலும் வறட்சி நிவாரணம் திட்டத்தின் கீழ் நகரில் தண்ணீர் குழாய் இல்லாத இடங்களிலும் மெயின் குழாய் பதிக்கப்படாத இடங்களிலும் ஆழ்குழாய் கிணறுகளும் மின் பவர் பம்புகள் அமைக்கப்பட்டு நகரின் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்கப்பட்டு மேலும் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத பகுதிகளுக்கு நகராட்சிக்கு சொந்தமான டிராக்டர், டேங்கர் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.18.80 கோடிக்கும் CPHEEO தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்ட தொகை ரூ.16.40 கோடிக்கும் உள்ள வித்தியாசத்தொகை ரூ.2.40 கோடியாகும். மேற்படி வித்தியாசத் தொகையில் ரூ.2.40 கோடியை இயக்குதல் மற்றும் பேணுதல் இடைவெளி நிரப்பும் நிதி 2012-2013-இன் கீழ்

மானியமாக கிடைக்கப்பெறும் தொகை ரூ.0.40 கோடியை தவிர்த்து மீதமுள்ள தொகை ரூ.2.00 கோடியாகும்.

மேற்படி மதிப்பீட்டில் புதிதாக 2500 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி குழாய் இணைப்பின் மூலம் வைப்புத் தொகையாக ரூ.1.00 கோடி மற்றும் பழைய குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு உயர்த்தப்பட்ட வைப்புத் தொகையின் வித்தியாசத் தொகையாக ரூ.2.00 கோடி வருவாய் பெற்று நகராட்சியின் பங்குத் தொகைக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.18.80 கோடிக்கும் CPHEEO தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்ட தொகை ரூ.16.40 கோடிக்கும் உள்ள வித்தியாசத் தொகை ரூ.2.40 கோடியில் இயக்குதல் மற்றும் பேணுதல் இடைவெளி நிரப்பும் நிதி 2012-2013-இன் கீழ் மானியமாக கிடைக்கப்பெறும் ரூ.0.40 கோடியை தவிர்த்து மீதமுள்ள தொகை ரூ.2.00 கோடிக்கும் ஈடு செய்யலாம். மேற்படி குடிநீர் குழாய் இணைப்பு அளிக்கும் வரை மேற்படி திட்டத்தை நிறைவேற்ற TUFIDCO மூலம் மேற்கண்ட ரூ.2.00 கோடியை கடனாகப் பெற்று செயல்படுத்தவும் குடிநீர் குழாய் இணைப்பு மூலம் பெறப்படும் வைப்புத் தொகையிலிருந்து மேற்படி கடனை திரும்ப செலுத்தவும் தவறும் பட்சத்தில் நகராட்சிக்கு கிடைக்கப்பெறும் மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து (SFC Grant) ஈடு செய்து கொள்ளவும் மேற்படி திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தவும் மேற்படி திட்டத்திற்கு மத்திய அரசு நிர்ணயிக்கும் நிபந்தனைக்கு உட்பட்டு சீர்திருத்தங்களை செயல்படுத்தவும் திட்டத்திற்கான நிதி ஆதாரங்களில் நிர்ணயிக்கப்படும் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணங்களை உயர்த்துவதற்கும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.18.80 கோடிக்கு CPHEEO தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்ட தொகை ரூ.16.40 கோடிக்கும் உள்ள வித்தியாசத் தொகை ரூ.2.40 கோடியில் இயக்குதல் மற்றும் பேணுதல் இடைவெளி நிரப்பும் நிதி 2012-2013-இன் கீழ் மான்யமாக கிடைக்கப்பெறும் ரூ.0.40 கோடியை தவிர்த்து மீதமுள்ள ரூ.2.00 கோடியை கடன் அல்லது மான்யம் பெறுவதற்கு நகராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கவும் இந்நகர்மன்றத்தின் தீர்மான எண்.1, நாள்.10.11.2011 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் இறுதி வரை வீடுகளுக்கு தண்ணீர் குழாய் இணைப்புகள் 15069 கொடுக்கப்பட்டு உள்ளது. 2021-2022-ஆம் ஆண்டு தண்ணீர் விநியோகக் கணக்கில் ரூ. 174.46 லட்சம் வருமானமாக கிடைக்கிறது.

**பாதாளச் சாக்கடைத்திட்டம்:**

இந்த நிதியாண்டில் பாதாளச்சாக்கடை திட்டம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. பாதாள சாக்கடை திட்டம் மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதின் பேரில் இத்திட்டத்திற்கான இடைக்கால திட்ட வரைவு ரூ.3.3.00 கோடியும், வருடாந்திர பராமரிப்புக் கட்டணம் ரூ.67.60 இலட்சத்திற்கும் தயார் செய்து நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மதுரை அவர்களின் கடிதம் எண்.116/ஜெடிஓ2/எப் கம்பம் /2008 நாள். 11.06.2008-இல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர் நடவடிக்கையில் இருந்து வருகின்றது.

**தீயணைப்பு**

நகரின் கோம்பை ரோட்டில் தீயணைப்பு நிலையம் ஒன்று இரு தீயணைப்பு வண்டியுடன் செயல்பட்டு வருகின்றது.

**:கட்டிட வரைபட அனுமதி :**

2021-2022-ஆம் ஆண்டில் புதியதாக கட்டிட அனுமதி கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள் மீது மேல்நடவடிக்கை எடுத்து கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் ரூ.2333243/- வருமானம் கிடைத்துள்ளது.

**வருவாய் கணக்கு:**

வருவாய் உதவியாளர்கள், வருவாய் ஆய்வரின் மேற்பார்வையில் பணியாற்றி வருகின்றனர். அறிக்கையாண்டில் வாடகை மதிப்பீடு அடிப்படையில் கீழ்கண்ட பிரசுரம் சொத்துவரி விதிக்கப்படுகிறது.

| | வரி இனம் | அரையாண்டுக்கு |
|---|---|---|
| 1) | பொதுக்காரியங்களுக்காக | 4 1/4 % |
| 2) | விளக்கு வரி | 2 1/2 % |
| 3) | கல்வி வரி | 2 1/2 % |
| 4) | தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 4 1/2 % |
| 5) | மல துப்புரவு வரி | 1 1/2 % |
| | மொத்தம் | 15 1/4 % |

**தொழில்வரி**

மொத்த தொழில்வரி கேட்புத்தொகை ரூ.2639883/- இலட்சத்தில் ரூ.2639883/- இலட்சம் 100 விழுக்காடு வசூல் செய்து முடிக்கப்பட்டது.

**வரியில்லா இனங்கள்**

மொத்த கேட்புத் தொகை ரூ.8717380/- இலட்சத்தில் ரூ.8073985/- இலட்சம் வசூல் செய்யப்பட்டது. ரூ.643395/- இலட்சம் அரசு கட்டிடங்களின் நிலுவை தொகையாகும். இதில் ரூ.255375/- இலட்சம் 2021-2022-ஆம் ஆண்டுக்கு வழக்கு நிலுவைத் தொகையாகும். மேற்படி நிலுவைத் தொகைகளை வசூல் செய்ய வழக்கு மற்றும் நடவடிக்கை மேற்கொண்டு வழக்கு நிலுவையில் உள்ளது. வசூலிக்கத்தக்க கேட்பில் 100 சதவீதம் முழுமையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

**இடவசதி:**

கம்பம் நகராட்சியின் மூலம் 6 பள்ளிக்கூடங்கள் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் 3 பள்ளிகள் நகராட்சியின் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகிறது. மீதி உள்ள 3 பள்ளிகள் தனியாருக்கு சொந்தமான கட்டிடங்களில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. மேற்படி பள்ளிக்கட்டிடங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றது.

**துவக்கக்கல்வி நிதி:**

சொத்துக்களின் வருட வாடகை மதிப்பில் ஆண்டு ஒன்றுக்கு ரூ.5/- கல்வி வரி விதிக்கப்பட்டு வந்தது. இதன் மூலம் வருமானம் ரூ.36.67 இலட்சம் கல்வி வரித்தொகையின் மீது அறிக்கையாண்டில் மான்யம் கிடைக்கப் பெற்றுள்ளது.

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் குழந்தைகள் கல்வி வளர்ச்சி சத்துணவுத்திட்டம்:**

01.08.1991-ஆம் தேதி முதல் இத்திட்டம் தேனி ஒருங்கிணைப்பு ஊட்டச்சத்து மையத்தில் பராமரிப்பின் கீழ் ஒப்படைக்கப்பட்டு விட்டது. இச்சத்துணவு கூடங்கள் அனைத்தும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் கல்வி சத்துணவுத்திட்டம்:**

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் கம்பம் நகராட்சிப் பகுதியில் 6 பள்ளி சத்துணவு மையங்களும், 24 சத்துணவு அங்கன்வாடி மையங்களும் அரசு ஆணை நிலை எண்.2271 சமூக நலத்துறை, சமூக ஊட்டச்சத்து துறை, நாள்.10.07.1997-இன்படி 7 தனியார் பள்ளிகளும், 3 அரசு பள்ளிகளும் நகராட்சிக்கு மாற்றப்பட்டு 17.10.1997 முதல் இயங்கி வருகின்றன. இதில் 24 அங்கன்வாடி மையங்களில் 17 மையங்கள் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. மீதமுள்ள 5 மையங்கள் தனியார் கட்டிடங்களில் அங்கன்வாடி அலுவலகத்தின் மூலம் வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. 16 பள்ளி சத்துணவு மையங்களிலும் உணவு அருந்தும் குழந்தைகள் 5-9 எண்ணிக்கை 2565-ம் 10-14 எண்ணிக்கை 2036 ஆகும். இத்திட்டத்தில் நகராட்சி அனைத்து பள்ளிகள் செலவுகள் அனைத்தும், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலமாக மான்யமாக அரசு அளித்து செயல்பட்டு வருகிறது.

**உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகள்:**

நகராட்சியால் உயர்நிலைப்பள்ளி ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**பொது நலம்:**

**மருத்துவ உதவி:**

இந்நகராட்சியில் மருந்தகம் ஏதும் பராமரிக்கப்படவில்லை. கம்பம் நகரில் 174 படுக்கைகள் கொண்ட காந்திஜி நூற்றாண்டு விழா அரசு மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகிறது.

**மறு ஆக்கம் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் மருத்துவமனை 01.05.2000 முதல் செயல்படுகிறது. வாரச்சந்தை அருகில் தமிழக அரசால் எல்லா வித வசதியுடன் புதிய மருத்துவமனை கட்டப்பட்டு 15.11.2003 முதல் செயல்பட்டு வருகிறது. மருத்துவமனையில் 7 படுக்கைகள் உள்ளது.

## பணியாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1) | மருத்துவ அதிகாரி | 1 |
| 2) | செவிலியர் | 3 |
| 3) | கிராமபுற செலவியர் | 7 |
| 4) | மருந்தாளுநர் | 1 |
| 5) | ஆய்வக நுட்பர் | 1 |
| 6) | துப்புரவு பணியாளர் | 2 |
| | மொத்தம் | 15 |

வெளி நோயாளிகள் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மருத்துவம் பார்க்கப்படுகிறது. திங்கள், செவ்வாய் கிழைமைகளில் கர்ப்பிணி தாய்மார்கள் மட்டும் பரிசோரிக்கப் படுகிறார்கள். புதன்கிழமை 5 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணி தாய்மார்களுக்கும் தடுப்பூசி போடப்படுகிறது. சனிக்கிழமை பால்வின நோய் சம்மந்தமாக வைத்தியம் செய்யப்படுகிறது.

அரசு மருத்துவமனை - 2
தனியார் மருத்துவமனை - 6
மொத்தம் - 8

## தடுப்பூசி போட்ட விவரம்:

| | |
|---|---|
| கர்ப்பிணி தாய்மார்கள் | 842 |
| கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரண ஜன்னி தடுப்பூசி | 842 |
| காசநோய் தடுப்பூசி | 760 |
| முத்தடுப்பு மற்றும் போலியோ சொட்டு மருந்து | 760 |
| தட்டம்மை தடுப்பூசி | 758 |
| ஊக்குவிப்பு | 758 |
| T.T ( 10 வயது) | 1010 |
| DPT ( 5 வயது) | 990 |
| T.T ( 16 வயது) | 910 |

வியாழக்கிழமை கிராமப்புற செவிலியர் மூலம் பள்ளிகளில் உள்ள சிறார்களுக்கு வைத்தியம் பார்க்கப்பட்டு, தடுப்பூசி போடப்படுகிறது. (School Health Programme)

**குடும்ப நலத்திட்டம்:**

2021-2022-ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் இத்திட்டத்தின் கீழ் இலக்கு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. இருப்பினும் கம்பம் அரசு மருத்துவமனையில் அறிக்கையாண்டில் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டது. நகராட்சியால் குடும்பநல மையம் பராமரிக்கப்படவில்லை.

Family Planning - 395

Copper (T) - 240

**இறப்பு:**

**இறப்பு விகிதம்:**

அறிக்கையாண்டில் பதிவான இறப்பு இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு

பதிவு பெறப்படாத இறப்புகள் கண்டு பிடிக்கப்பட்டு அபராதக் கட்டணம் வசூல் செய்து பின்னர் பதிவு செய்யப்பட்டது.

பல்வேறு நோய்கள் மூலம் ஏற்பட்ட இறப்பு விளக்கம்:

| | | |
|---|---|---|
| 1 | டெங்கு காய்ச்சல் | - |
| 2 | சீதப்பேதி | - |
| 3 | வயிற்றுப்போக்கு | - |
| 4 | அம்மை, காலரா | - |
| 5 | மலேரியா காய்ச்சல் | - |
| 6 | பிற காரணங்கள் | 546 |

நகரில் வாந்திபேதி (காலரா) இல்லை. இருப்பினும் தடுப்பு நடவடிக்கைகளுக்காக இந்நகராட்சியில் ஒரு துப்புரவு அலுவலர், மூன்று துப்புரவு ஆய்வாளர்கள் மூலம் பிறப்பு இறப்பு பதிவு செய்தல் மற்றும் இதர புள்ளி விவரங்கள் பதிவு செய்தல் போன்ற பணிகள் செய்து வருகிறார்கள். அறிக்கையாண்டில் பிளேக் போன்ற கொள்ளை நோய் இல்லை.

**கொசுதடுப்பு:**

இந்நகராட்சியில் கொசு தடுப்புத்திட்டம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆறு தூய்மை பணியாளர் கொசு மருந்துகள், 63 DBC பணியாளாகள் மூலம் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்படுகிறது. 2021-2022-ஆம் அறிக்கையாண்டில் 100 லிட்டர் அபேட், 100 லிட்டர் பைரேத்திரம் கொசு மருந்து அருணை எண்டர்பிரைசஸ், சென்னை, துணை இயக்குநர் பொது சுகாதாரம் தேனி அவர்களிடமிருந்து 20 லிட்டர் மாலத்தியான் மருந்து வாங்கப்பட்டு புகை மருந்து அடிக்கப்பட்டது. மேலும் அபேட் மருந்து 100 லிட்டர் கொசு ஒழிப்பு

பணிக்கு பயன்படுத்தப்பட்டது. இந்நகராட்சியில் பூச்சியால் வரக்கூடிய நோய் வராமலும், சிக்குன்குனியா, டெங்கு மற்றம் மலேரியா போன்ற காய்ச்சல் வராமல் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**<u>பாதுகாப்பு பொது சுகாதாரம்:</u>**

பொது சுகாதாரப்பிரிவில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1 | துப்புரவு அலுவலர் | 1 |
| 2 | துப்புரவு ஆய்வர் | 3 |
| 3 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 7 |
| 4 | களப்பணி உதவியாளர் | 1 |
| 5 | லாரி மற்றும் டம்பர் பிளேசர் லாரி ஒட்டுனர் | டிப்பர் லாரி -2<br>LCV -6<br>BOV -3 |
| **6** | **மலக்கழிவுநீர் ஊர்தி ஓட்டுநர்** | **1** |
| **7** | **தூய்மை பணியாளர்கள்** | **49** |

நகரில் சமுதாய கழிப்பறை 27, பொதுக்கழிப்பறை-2 மற்றும் 1 சிறுநீர் கழிப்பிடமும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.
கீழ்கண்ட உந்துகளும் பிற தளவாடங்களும் அறிக்கையாண்டில் பயன்பட்டன.

| | | |
|---|---|---|
| **1** | **டிப்பர் லாரி** | **2** |
| **2** | **மினி லாரி LCV** | **6** |
| **3** | **BOV** | **31** |
| **4** | **கழிவுநீர் லாரி** | **1** |

நகராட்சி தூய்மை பணியாளர்களை கொண்டு மனித கழிவுகளை மனிதனே அகற்றும் பணி தடை செய்யப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது. கலவை உரம் தயார் செய்யப்பட்டு வருகிறது. மக்கும் குப்பைகளை பிரித்து MCC (நுண்உரக்குடில்) மூலம் கலவை உரம் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்து தொகையை தூய்மை பணியாளர்களுக்கு பகிர்தளிக்க அனுமதிக்குட்பட்டு செயல்படுத்தப்படுகிறது. மக்காத குப்பைகளில் (Dry Waste) விற்பனை செய்யக்கூடிய கழிவுகளை தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரம் செய்து

| வருடம் | இலக்கு | செய்த உரத்தின் தன்மை | |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| **2019-2020** | | **16377** | **16377** |
| **2020-2021** | | **21400 + 2340** | **23740** |
| **2021-2022** | | **10650 + 14130** | **24780** |
| 2022 | | NIL | - |
| | | | 64897 kgs |
| **2019-2020** | 16377 | 22326 | - |
| **2020-2021** | 21400 | 56400 | 2340 -4020 |
| **2021-2022** | 10650 | 21300 | 14130 -12660 |
| 2022 | | | 116706 |
| **2019** | 8934 kg | 20-1000 kg | |
| **2020** | 2600 kg | 21-9910 kg | |
| **2021** | 3550 kg | 22- Nil | |

**<u>உணவுக்கலப்படம்:</u>**

பொது நலச்சட்டத்தின் கீழ் உள்ள உணவு பொருட்கள் கட்டுப்பாடு பற்றிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. சிற்றுண்டிச்சாலை, உணவு விடுதிகள் உணவு கலப்பட தடைச்சட்டம் இந்நகராட்சியில் செலவாணியில் இருந்தது. இந்நகராட்சியில் ஒரு திங்களில் 4 மாதிரிகள் வீதம் ஒரு வருடத்திற்கு 38 மாதிரிகள் எடுக்கப்பட வேண்டும். 2021-2022-ஆம் ஆண்டுக்கு உணவு மாதிரி எடுத்ததில் 4 உணவு மாதிரிகள் உணவு கலப்பட தடைச்சட்டத்திற்கு உட்படாததாக கூறி கலப்பட தடுப்பு சட்ட விதிகளின்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

**<u>தொழில்கள், அச்ச அருவருப்பு வணிகங்கள்:</u>**

29.11.1962-ஆம் தேதிய மன்ற தீர்மான எண்.312-ம் பிரகாரம் உப விதிகள் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வந்தது. அச்ச அருவருப்பு வணிகங்கள் நடத்த உரிமையாணை வழங்கப்பட்டது. இதன் மூலம் வருமானம் ரூ. 5.10 ஆகும்.

**<u>திடக்கழிவு மேலாண்மை:</u>**

கம்பம் நகரில் 33 வார்டுகள் உள்ளன. மேற்படி வார்டுகளிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுகளை 31 BOV (தள்ளுவண்டிகள்) 2 மினிலாரிகள் மற்றும் டம்பர் பிளேசர் லாரிகளை கொண்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வீடுகள் தோறும், குப்பைகள் கேட்டு வாங்கப்பட்டு, அவைகளில் மக்கும் மற்றும் மக்காத குப்பை என பிரித்து வாங்கப்படுகிறது. கம்பம் நகரில் புதியதாக 4.5 ஏக்கர் நிலம் வாங்கப்பட்ட நிலத்தில் 10 சென்டு பரப்பளவில் வின்ரோஸ் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு

2021-2022 ஆண்டிற்கு 311 மெட்ரிக்டன் கலவை உரம் தயார் செய்யப்பட்டு உள்ளது. மேலும் ஆங்கூர்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள MCC மற்றும் நந்தகோபால்சாமி நகரிலுள்ள MCC ஆகியவற்றில் 49 மெட்ரிக்டன் கலவை உரம் தயார் செய்யப்பட்டுள்ளது.

**நிதி நிலைமை:**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையின் 12.01.2000-ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.3-இன்படி 01.04.2000 முதல் புதிய கணக்கு வைப்புமுறை இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2021-2022-ஆம் ஆண்டில் கீழ்கண்டவாறு வரவு-செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | 2021 -2022 | |
|---|---|---|
| | வரவு | செலவு |
| பொதுநிதி | 2017-2018 | 1 |
| குடிநீர் நிதி | 2018-2019 | 2 |
| கல்வி நிதி | 2019-2020 | 3 |
| மொத்தம் | | |

**தணிக்கை:**

**தணிக்கைத்தடை நிலுவை விவரம்:**

| வரிசை எண் | வருடம் | நிலுவையிலுள்ள தணிக்கைத்தடைகள் |
|---|---|---|
| 1) | 2017-2018 | 1 |
| 2) | 2018-2019 | 2 |
| 3) | 2019-2020 | 1 |

**கணினி நடைமுறைப்படுத்துதல்:**

இந்நகராட்சியில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 16.06.1999-ஆம் நாளிட்ட ந.க.எண்.19543/98/OP-1 செயல்முறை உத்தரவின்படி கணிப்பொறி உதவி திட்ட அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். கணினி பிரிவிற்கு இரண்டு கணினிகள் வாங்கப்பட்டு உள்ளது. மின்னஞ்சல் வசதியும் (இ.மெயில்) செய்யப்பட்டு நடைமுறையில் இயங்கி வருகிறது. புதிய கணக்கு முறை 01.04.2000 முதல் நடைமுறைப்படுத்தி, செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூடுதலாக இரண்டு புதிய கணினிகள் சென்னை திட்ட இயக்குநர் (TNUDP-II) அவர்களின் PMU/IDS/0187/2002 நாள்14.03.2002 உத்திரவின் வழியே வாங்கப்பட்டு உள்ளன. மேலும்

கணினிகள் வாங்கப்பட்டு தற்சமயம் 19 கணினிகள் நல்லமுறையில் இயங்கி வருகிறது. மேலும், சொத்துவரி, குடிநீர் கட்டணம், கேட்பு மற்றும் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், அலுவலக கோப்புகள் அனைத்தும் கணினி வழியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>பொது:</u>**

அறிக்கை ஆண்டில் நிதி நிலைமை சீராக இருந்தது. இந்நகர் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்பட்டது. நகராட்சியின் நிதி நிலையை பொருத்து சாலை பராமரிப்பு, சாக்கடை வசதி ஆகியவை செய்து கொடுக்கப்பட்டது.

அனைத்து பணியாளர்களுக்கு மாத ஊதியம் தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. அரசு கடன் மற்றும் பிற நிதி நிறுவனங்களிடம் பெற்ற கடன் தொகை படிப்படியாக செலுத்தப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாகம் சிறந்த முறையில் செயல்பட நகர்மன்றத்தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒத்துழைப்பு நல்கப்பட்டது.

நன்மதிப்புடன்

ஆணையாளர்
கம்பம் நகராட்சி.